# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 | யாழ்ப்பாணம் | தொலைபேசி 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆவணி 1980 ★ இதழ் - 56



## கூட்டுறவின்  தோற்றமும் வளர்ச்சியும்

— றெச்டேல் முன்னோடிகள் —

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தின் றெச்டேல் என்னும் நகரத்தில் பிளானல் என்னும் மெல்லிய கம்பள நெசவு, குடிசைத்தொழில் முறையில் நடைபெற்றுவந்தது. அங்கே வேலைசெய்த தொழிலாளர் முதன் முதலாகச் சம்பள உயர்வு கேட்கத் தீர்மானித்தார்கள். வேலை நிறுத்தஞ் செய்தால் நிறுத்த நாட்களில் சம்பளம் கிடையாது. வயிறு வாடவிடவேண்டிவரும். எனவே செலவைச் சமாளிப்பதற்காக முன் கூட்டியே ஒவ்வொருவரிடமும் வாரத்துக்கு இரண்டு பென்ஸ் வசூலித்து நிதி சேர்ப்பதெனத் தீர்மானித்தனர். ஆனால் சில தொழிலாளர் கொடுக்க மறுத்ததால் வேலைநிறுத்தமும் கைவிடப்பட்டது.

இதற்குள் நல்ல மனப்பான்மையுள்ள [ஒரு சிலர் உபகரித்த தொகையை என்ன செய்வது என்று யோசித்தபோது, பொருட்களை வாங்கி விற்கலாம் எனத்தீர்மானித்த இருபத்தெட்டுத் தொழிலாளர் ஓர் ஒதுக்குப்புறமான ஒழுங்கை ஒன்றில் கடையை ஆரம்பித்தனர். ஆனால் பகலில் வேலைக்குப்போக வேண்டும், கடையில் இருப்பதற்கும் கூச்சம் இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து வாரத்தில் இரண்டு இராப்பொழுதில் கடை திறப்பது எனத் தீர்மானித்தார்கள். கடை திறந்தும், அது ஒதுக்கும் புற ஒழுங்கையாதலாலும், இராவேளையாதலாலும் பழைய வாடிக்கையாளரைக் கைவிட மனமில்லாமலும் மக்கள் இவர்களை ஆதரிக்கவில்லை.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)



சர்வோதயம் நூலகத்திற்கு நீதிநூற்கொத்து நூல்களை சர்வோதய நூலகரிடம் மில்க்வைற் அதிபர் அன்பளிப்புச் செய்யும் காட்சி.

★ எல்லோரும் வாழ ஏற்றம் தரும் கூட்டுறவு ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### திருஇன்னம்பர்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாளொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே.

திருச்சிற்றம்பலம்

என்னைவிட எனக்கு வேறுயாரும் இனியவன் இல்லையென்றாலும் என்னைவிட இனியவன் ஒருவன் உள்ளான்; அவன் யாவன் என்றல், என்னுள்ளே உயிர்ப்பாகப் புறம் போந்தும் புக்கும் என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசன்;




### குடிமை

உயர்குடிப் பிறந்தாரது தன்மை

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

உயர்ந்த குடியிற் பிறந்தோர்கள் ஒழுக்கம், மெய்ம்மை, மானம் ஆகிய மூன்றிலும் தமது நிலை தவறமாட்டார்கள்.

**Good Birth**

Noble bearing, truthfulness and sense of shame-from these three men of good birth never stray.

### உயர்ந்த குடியிற் பிறந்தவர்

செம்மையும் நாணமும் உள்ளவர், முகமலர்ச்சி நீங்காதவர், தம்பெருமை குறைவதற்கான எச்செயலையும் எவ்வளவு கோடிபெற்றாலும் செய்யத்துணியார். வறுமை வந்தாலும் குணம் மாறமாட்டார்கள், வஞ்சனைகொண்டு பொருந்தாதன செய்யார். அவரிடம் ஏதாவது குற்றமிருப்பின் அது சந்திரனின் மறுப்போலிருக்கும், அவர்களிடம் குணமின்மை காணப்படின் அவர்களின் குலப்பிறப்பிலே உலகம் சந்தேகப்படும், நிலத்தின் தன்மையை முளை காட்டுவதுபோல உயர்குடிப் பிறந்தாரின் நயத்தை அவர்கள் சொல்காட்டும், நன்மையை விரும்பின் நாணத்தை விரும்புதல்வேண்டும். குணத்தை விரும்பின் பணிவை விரும்புதல்வேண்டும்,

## 1980 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1; | வெள்ளி | — | மட்டக்களப்பு மாமாங்கம் கொடி |
| 3; | ஞாயிறு | — | நாயன்மார்கட்டு<br>இராஜ ராஜேஸ்வரி கொடி |
| 5; | செவ்வாய் | — | மண்டூர்க் கந்தர் கொடி<br>கார்த்திகை விரதம் |
| 6; | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 8. | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 9. | சனி | — | மாவிட்டபுரம் தேர் |
| 10; | ஞாயிறு | — | ஆடி அமாவாசை விரதம்<br>மாவிட்டபுரம் தீர்த்தம்<br>செல்லச்சந்நிதி கொடி |
| 13. | புதன் | — | ஆடிப் பூரம்<br>துர்க்கையம்மன் கொடி |
| 16. | சனி | — | நல்லூர் கொடி<br>மஞ்சவனப்பதி கொடி |
| 17. | ஞாயிறு | — | பொன்னாலை வரதர் கொடி |
| 22. | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 23; | சனி | — | சனிப்பிரதோஷ விரதம் |

### நவராத்திரி நாட்களில் மரம்நாட்டும் பணி

அடுத்துவரும் நவராத்திரி நாட்களில் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், சாரணர் கூட்டங்கள் முதலிய இயக்கங்களை முன்நிற்கவிட்டு மில்க்வைற் ஸ்தாபனம் பெருமளவில் மரம்நாட்டும்பணியை செய்யத்தயாராகிறது; கொண்டும் கொடுத்தும் பங்குபற்றவிரும்புவோர் இன்றே விண்ணப்பித்து அணிசேருங்கள், அழையுங்கள். எல்லோரும் சேரலாம்; எல்லோருக்கும் ஆதரவுண்டு; சமூகம் வாழவேண்டும்; சமூகப்பணி சகலருக்கும் பொது.

சங்கீத உணர்வு இல்லாதவன் சங்கீத இன்னிசை ஒலிகளின் ஒருமிப்பில் மனம் நெகிழாதவன், சூழ்ச்சி, நாசம், நயவஞ்சகம் முதலியவற்றிற்கே தகுதியானவன். அவனை எவரும் நம்பவேண்டாம்.

— ஷேக்ஸ்பியர்

இந்நிலையில் இவர்கள் தேயிலை, புகையிலை ஆகியவற்றை விற்பதற்கு முற்பட்டனர். வியாபாரம் நடைபெற்றது. இவற்றை வாங்கப்போனவர் வேறு பொருட்களையும் வாங்கத் தொடங்கவே ஒவ்வொரு இரவிலும் கடை திறந்தனர். வியாபாரம் அதிகரித்து, இடம் போதவில்லை. பங்காளர் பலர் நான் முந்தி என்று பணம் முதலீடு செய்ய முன்வந்தனர். சொந்தமாக பெரியகடை வாங்கப்பெற்றது; வியாபாரம் அதிகரிக்கவே சனிக்கிழமை பகலும் கடையைத் திறந்தனர்.

முனேற்றத்தைச் சொல்லவா வேண்டும்; தொழிலாளருக்கு வாசிகசாலை, நூல்நிலையம், பொழுது போக்கு வசதிகள் எல்லாம் செய்யப் பெற்றன. கடைக்கு வேண்டிய பொருள்களை மொத்தமாகவே வாங்கினார்கள். இலாபத்தைச் சமமாகப் பங்கிட்டார்கள். மதுபானம் வழங்காமல் உணவுக் கடை நடத்தினர். வீடில்லாதவர்களுக்கு வீடுகள் கட்டத் தொடங்கினர். பொது நலனுக்காகப் பெரிதும் பாடுபட்டனர். தன்கையே தனக்கு உதவி என்னும் நோக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கினர். பெரிய மாவரைக்கும் ஆலையையும், பருத்தி ஆலை ஒன்றையும் நிறுவினர். நகரத்தில் பல கிளைக் கடைகளைத்திறந்தனர். இவர்கள் வழியில் வேறு பல நகரங்களிலும் கடைகள் ஆரம்பித்தவர்களையும் ஒன்றிணைத்துக் கூட்டுறவு மொத்த நிலையம் என மான்செஸ்ரர் நகரில் C. W. E; நிறுவினர்.

இவ்வளவு தூரம் முன்னேறிய றொச்டேல் முன்னோடிகள் இது காறும் விற்பனைக்குத் தேவையானவற்றை விலைக்கு வங்குவதை விட்டுத் தாமே உற்பத்தி செய்ய முற்பட்டனர், விஸ்கோத்து முதலிய உணவுப் பொருள்கள், சப்பாத்து, செருப்பு, சோப்பு, மருந்து வகைகள் எல்லாவற்றையும் செய்தனர். இவற்றைப் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் வளர்த்தார்கள்.

ஆண்டு தோறும் கல்விப் பணிக்காகப் பெருந்தொகை உதவினார்கள். மருத்துவ உதவிக்காகப் பெருந்தொகை வழங்கினார்கள். மனிதரை மனிதராக மதிக்க வேண்டும் எனப்போதித்த தொழிலதிபர் றொபேட் ஓவின் என்பாரின் போதனைகளைச் சாதனையிற் காட்டினார்கள். கூட்டுறவு என்றால் என்ன என்பதைச் செயலில் விளக்கினார்கள். இவர்கள் தான் றொச்டேல் முன்னோடிகள் வழிகாட்டிகள். அவர்கள் தங்கள் பெயர்களைக் கல்லிலோ செம்பிலோ பொறித்துப் போகவில்லை. தாங்கள் கூடியிருந்த றொச்டேல் நகரத்தின் பெயரைத் துலக்க வைத்துப் போனார்கள்,

## நல்லூர், நல்லூர்

நல்லூர்க்கந்தசுவாமி கோயில் அலங்காரமாகவும் சுற்றுடல் சுத்தமாயும் உள்ளது. கடலைக்கோது, ஐஸ் கிறீம் மட்டை, கருப்புச்சக்கை எதையும் வீதிகளில் வீசாமல் வழிபட்டுப் போகும் பிள்ளைகளே சைவ நாகரிகம் தெரிந்தவர்கள்.

பெண்கள் தங்களை அலங்கரிக்கவும் அழகை அதிகரிக்கவும் ஆயிரமாயிரமாகச் செலவிட்டு அணிகளைச்சுமந்து வந்து போகிறார்கள். அவர்கள் தங்கநகைகளில் ஒருகண் வைத்திராவிட்டால் எத்தனையோ கண்கள் அவற்றைக் கவனிக்கின்றன.

## உங்களுக்குத் தெரியுமா?

### எவர்? என்ன? எது? எங்கே?

(விடைகள் வேறிடத்தில்)

1. அரசியல் நூலை முதலில் எழுதியவர்.
2. சூறாவளிக் காற்றின் வேகம்.
3. முழங்கும் நாற்பது.
4. கலகாரி வனாந்தர வாசிகள்.
5. கனடாவைக் கண்டவர்.
6. சேகுவாரா கொலையுண்ட இடம்;
7. கிறிக்கற் பிச்சின் நீளம்.
8. பத்துலட்சத்தின் ஆங்கிலப் பெயர்.
9. மனித உடம்பிலுள்ள எலும்புகளின் தொகை.
10. சதுரங்கப் பலகையில் உள்ள சதுரத்தொகை;
11. இங்கிலாந்தின் முதல் ஆஸ்தானப் புலவன்.
12. சந்திரனில் வெடிப்புக்களை முதலிற் கண்டவர்.
13. ஆசியாக்கண்டத்தில் மிகப் பெரிய அணைக்கட்டு;
14. அணுவைப் பிளக்கலாம் என முதலிற் கூறியவர்;
15. உலகில் அதிக நிலநெய் ஏற்றுமதி செய்யும் துறை.
16. இந்தியாவில் உள்ள பெரிய மாகாணம்.
17. பிரித்தானியாவில் பெண்கள் வாக்குரிமைக்குப் பாடுபட்டவர்.
18. மழைதரும் முகிலின் பெயர்.
19. மிகமேற்கில் உள்ள பொதுவுடமை நாடு.
20. அத்துலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாக முதலிற் பறந்த பெண்.


## ★ இந்துநாகரிகம் ★

மில்க்வைற் கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய இந்துநாகரிகம் முதற்பகுதியைப் படித்தவர்கள் இரண்டாம் பகுதி எப்போது வரும் என்று அடிக்கடி கேட்டுவந்தார்கள். இரண்டாம் பகுதி இதோ வருகிறது. இது தென்னாட்டில் எழுந்த பக்தி நெறி சம்பந்தமாக 27 அடியார்கள் பாடிய 12 திருமுறைகளின் முழு விளக்கமும் வரலாறும் காலமும் பயனும் இன்ன பிறவும் விளக்கவல்ல பெருநூலாகும்.

பன்னிரண்டு போயின்ற் எழுத்தில் அழகாக அச்சிட்டு வெளியிடுபவர்கள்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேயன் துறை வீதி,
யாழ்ப்பாணம்;


★ எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் ★

## றெச்டேல் முன்னோடிகள் நோக்கமும் கோட்பாடுகளும்

றெச்டேல் நியாய வாதிகள் சங்கம் என்னும் பெயரில் 24-10-1844 இல் பதிவு செய்யப்பெற்ற கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் பின்வருமாறமையும்.

1. அங்கத்தவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, முதலிய பொருள்களை வாங்கி விற்பதற்கு ஒரு கூட்டுறவுப் பண்டசாலையை நிறுவுதல்.
2. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு தத்தம் தரத்தை உயர்த்திக்கொள்ள விரும்புகிற அங்கத்தவர்களுக்கு வீடுகளைக் கட்டியோ விலையாகவாங்கியோ கொடுத்தல்.
3. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் தொழிற்சாலைகளை நிறுவுதல்.
4. நிலத்தை விலையாகவோ குத்தகையாகவோ பெற்று வேலையில்லாதவர்களுக்கு வழங்கி உதவி செய்தல்,
5. அங்கத்தவராய நுகர்வோருக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்தல். பொருட்களுக்குச் சந்தைகளை உண்டாக்குவதற்குக் குடியேற்ற நாடுகளைத் தாபித்தல்.
6. ஒத்த கொள்கையினை உடைய பிறருக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுத்தல்,

## அடுக்குமொழி

பங்கு பாகம்
பசி பட்டினி
பசியும் பிணியும்
பட்டது கெட்டது
பட்டம் பதவி
படிப்பும் பண்பும்
பண்பாலும் பதவியாலும்
பண்பும் நண்பும்
பணம் காசு
பணம் பதவி
பணிவும் கனிவும்
பதட்டமும் படபடப்பும்
பதுங்கி ஒதுங்கி
பதைத்து கொதித்து
பந்த பாசம்
பந்தம் தொந்தம்
பந்தமும் பாசமும்
பம்பை பறட்டை

குழந்தையை மூதன் முதலில் எத்தகைய வாழ்விற்குத் தயார் செய்யவேண்டும் என்பதை முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், ஆசிரியர் என்று கூறும் எவரும் உண்மையான கல்வியை விருத்தி செய்ய முடியாது.

—ரஸ்கின்

## றேச்டேல் முன்னோடிகள் கோட்பாடுகள்


1. தங்களுடைய சொந்த முதலைக் கொண்டே தொழில் நடத்தல்.
2. இயன்றவரையில் நல்ல பொருள்களையே கொள்முதல் செய்தல்.
3. சரியான அளவு, நிறைகளுடன் பொருட்களை [இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் பண்பாடாயிருந்தது. கொள்வதும், மிகைகொள்ளாது கொடுப்பதும் குறைபடாது] விற்றல்.
4. கொள்முதலுக்குக் குறைந்தும், அயல் வியாபரிகளுடன் போட்டியிட்டும் விற்காமல், கடை விலைக்கே விற்றல்.
5. அங்கத்தவர்கள் கடனாளிகளாகாவண்ணம் காத்தற் பொருட்டு கடனுக்குக் கொள்ளலும் விற்றலும் செய்யாதிருத்தல்.
6. அங்கத்தவர் பொருட்களை நுகர்தற்கு வாங்கிய அளவுக்கு ஆதாயத்தைப் பிரித்துப் பங்கிடுதல்.
7. சங்கத்திற் கிடைத்த இலாபத்தைச் சங்கத்திலேயே சேமித்து வைத்தல்.
8. தொழிற்சாலையில் கிடைக்கும் இலாபத்தைத் தொழிலாளரிடையே சம்பள விகிதப்படி பிரித்து வழங்குதல்.
9. அங்கத்தவரின் கல்வி விருத்திக்காக இலாபத்தில் 2 1/2 வீதத்தைச் செலவிடல்.
10. ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமையே வழங்குதல்.
11. குடியேற்ற நாடுகளைத் தாபித்து அங்கும் இம்முறைகளைப் பயிற்றுதல் பரப்புதல்.
12. மொத்த வியாபார நிலையம் நிறுவுதல்.
13. அங்கத்தவரின் சுகவாழ்வையும் நன்நடத்தையையும் மேலோங்கச் செய்தல் இச் சங்கத்தால் முடியும் என்னும் திட நம்பிக்கையோடு இருத்தல்.

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

தூய்மையான எண்ணம் பேச்சைவிட வல்லது.
வேட்கையை ஒழித்தவனுக்கு விலங்கம் இல்லை.
உண்மையை உள்ளபடி அறிவது ஞானம்.
பிறர்க்கென வாழ்பவனுக்குப் பேராற்றல் தானே வரும்.
நல்லொழுக்கத்தின் நறுமணம் எங்கும் பரவும்.
பண்பாட்டில் முதிர்ந்தவனே உண்மையான பெரியவன்.
தன்னை அறியவல்லவன் தத்துவத்தை அறிகின்றான்.
மன்னித்து விடுவதால் சினம் அகன்று போகிறது.
சொல்லும் சிந்தையும் ஒன்றுபடுவது யோகம்.
விஷத்தையும் அமிர்தமாக்கவல்லது அன்பு.
நேர்மையாக வாழுகின்றவனுக்குத் தன்னம்பிக்கையுண்டு.

★ அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு ★



## ★ பஞ்சதந்திரம்

தன்மானம் உள்ளவனின் வீரம், வித்தை, புண்ணியம், திறமை, குணம் எப்படிப்பட்டது என்பதை அயல் நாட்டுப் பிரயாணம் காட்டி விடுகிறது.

முட்டாள் நண்பனைவிட அறிவுள்ள எதிரியே மேல், நெருக்கடி மிகுந்த காலத்திற் கூட உலகம் புகழக் கூடிய காரியத்தையே பெரியவர்கள் செய்கின்றனர். கெட்ட காரியத்தில் புத்திசாலிகள் பிரவேசிப்பதில்லை. எவ்வளவு தான் தாகம் எடுத்தாலும் யாரும் சாக்கடை நீரைப் பருகுவதில்லை. உயிர் போவதாயினும் கெட்ட காரியத்தைச் செய்தலாகாது.

இரக்கங் காட்டும் அரசன், கண்டதைத் தின்னும் பிராமணன், அடாங்காப் பிடாரியான மனைவி, கெட்ட எண்ணமுள்ள நண்பன், கவனமற்ற நீதிபதி, வணக்கமற்ற வேலைக்காரன் இவர்கள் தம் காரியம் அறியாதவர்கள்.

அரசர்களின் தர்மம் வேறு, சாதாரண மனிதரின் தர்மம் வேறு மனிதருக்குத் தோஷமானது மன்னருக்குக் குணமாயமையலாம்.

நல்ல குணம், நல்ல நடத்தை, தன்னடக்கம் உள்ளவனும் எதிரிகளை அழிக்கத் துணிவுள்ளவனும் பேராசை இல்லாதவனுமான வேலையாட்கள் இருக்கிறவரையில் எஜமானுக்கு அச்சம் உண்டாவதில்லை.

## திரு இன்னம்பர் ஈசன்

அவர் நிலம் நீர் தீ வளி ஆகாயம் சூரியன் சந்திரன் இயமானன் என்னும் எட்டு மூர்த்தியாயும், தலை மாலை கொன்றை தும்பை கங்கை அனல் சூலம் மான் மழு உடையவராயும், தம்மடியாருக்கு அருள் புரிபவராயும், சிவன் தலைவன் மதி சூடி மறை பாடி முன்னவன் பொடி பூசி இன்னன் இன்புறவன் என வழங்குபவராயும், தம்மடியார் அன்பினை அளப்பவரும், என்மனத்தை உருக்குபவரும் சடையில் கங்கை, கையில் தீ பாகத்தில் உமையாள் நிற்ப என் துன்பந் துடைப்பவரும், தொழுது மலர் தூவுபவரையும் அழுது அரற்றுகின்றவர்களையும் வீண் பொழுது போக்குகின்றவர்களையும் கணக்கில் எழுபவராயும், மன்மதனையும், திரிபுரங்களையும் பொடியாக்கியவரும், நவக்கிரகங்களை அடக்கியாண்ட இராவணனையும் அடக்கியவருமான எனக்கினிய ஈசன்.

## ஜெமனியில் கூட்டுறவு ரைபீசன் முறை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் நிகழ்ந்த கெடுபிடிகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் 1848-ஆம் ஆண்டு கலவர ஆண்டாக நிலவியது; அக்காலத்தில் ஜெமனியில் உண்டான பஞ்சம் பட்டினியை ஓரளவுக்கு நீக்கக் கருதிய உத்தமர் முப்பது வயதான ரைபீசன் பிரடறிக் வில்சன் என்பாராவர். சில பணக்காரரின் உதவி பெற்று ஏழைகளுக்கு உணவு கொடுக்க முயன்ற ரைபீசன், தானியங்கள் உருளைக்கிழங்கு ரொட்டி ஆகியவற்றை மொத்தமாக வாங்கி, ஏழைகளுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்தார்.

ஏழைக் கமக்காரரின் நிலையை உயர்த்த முயன்ற ரைபீசன் 1850-ஆம் ஆண்டில் கால்நடைகளை நியாயமான விலைக்கு விற்றார். பின்னர் 1852-ஆம் ஆண்டில் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கினார். கிராமோதயத்தின் பொருட்டு உத்தரவாதம் வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினார். கிராமத்தவர் ஏழைகள் அங்கத்தவராய்ச் சேர்ந்து நன்மையடைந்தார்கள். ரைபீசன் முறையிற் கண்ட நன்மைகள் பல.

1. அங்கத்தவரான பங்குக்காரர் ஒருவருக்கொருவர் அறிமுகமானவராய் உதவி செய்யக்கூடியவராயிருந்தனர்; அதற்காக விவகார எல்லை சிறிதாக அமைந்தது. அங்கத்தவர் தொகை 2000 வரை இருந்தது.
2. ஏழைகளும் அங்கத்தவராதற் பொருட்டு பங்குத் தொகை மிகக்குறைவாயிருந்தது. (ரைபீசனின் கொள்கை ஏழைகள் பங்குத்தொகை கட்டாமலே அங்கத்தவராகலாம் என்பதே)
3. சாசுவதமான- வளர்ந்துகொண்டே போகும் சேமநிதியை உடையதாதல். சேமநிதியைப் பிரித்துக் கொடாது வளர்த்தல்.
4. உத்தரவாதம் வரையறுக்கப்படாத அங்கத்தவரை உடையதாதல்.
5. உபயோகப்படக்கூடிய பொருள்களை உண்டாக்கிக் கொள்வதற்கும், பிற இன்றியமையாத நற்காரியங்களுக்குமே பங்குக்காரருக்குக் கடன் கொடுத்தல் வேண்டும்.
6. நீடித்தகால எல்லையில் கடன்கொடுத்து, அதனைச் சிறு சிறு தொகையாக மீள வாங்கிக்கொள்ளுதல் வேண்டும்.
7. கடன்பெறும் தொகையின் அளவையும் சேமித்து வைக்கும் தொகையின் அளவையும் அங்கத்தவரே தீர்மானித்தல் வேண்டும்.
8. இலாபம் என்பதையே கருதாமல் இருத்தல் வேண்டும்; ஆதாயப்பணம் பங்கிடப்படும் போது, அது சாதாரண வட்டித் தொகைக்கு மேற்படக்கூடாது.
9. நிர்வாக அங்கத்தினர் சம்பளம் பெறாமல் கடமையாற்றுதல் நல்லது. அவசியமானால் காரியதரிசிக்குப் படி வழங்கலாம் என இருத்தல்;

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

★ சிறிய முதலும் பெரிய முதலீடாகும் ★



## ஔவை அருந்தமிழ்

### 7. திருக்கோவலூரைச் சிறப்பித்தது

நல்லார் ஒருவர் உளராயின் எல்லார்க்கும் பெய்யும் மழை என்பது ஔவையாரின் கருத்து. திருக்கோவலூர் மன்னன் நல்லவன். அவன், பாரிமகளிரைத் திருமணஞ் செய்யச் சம்மதித்திருந்தான். திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைப்பதற்கு மூவேந்தரும் பெருந்தன்மையாக வந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறான மங்களப் பெருநாளிலே திருக்கோவலூர் முன்னரிலுஞ் சிறப்பாக இருத்தல்வேண்டும் என்று ஔவையார் கருதினார்.

கருணையுள்ள வருணபகவானை நோக்கி, "இந்தக் கடல் சூழ்ந்த பூமியை இரக்கத்தினாலே காப்பாற்றி வருகின்ற வருணனாகிய தெய்வமே! சிற்றரசனாகிய மலையமான் என்பானுக்குத் திருக்கோவலூரிலே நடைபெறும் திருமண விழா நேரத்தில், முன்னே கடல் நீரை முகந்து பின் மழையாகப் பொழிகின்ற முறையை மாற்றி, பொன் மழையாகப் பொழியச் செய்வாயாக" என்று பாடினார்.

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல் - திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுவாரி யைமாற்றிப்
பொன் மாரி யாகப் பொழி.

தெய்விகப் புலவராகிய ஔவையார் தமக்கென எதையும் வேண்டித் தொழாது நாட்டு மக்களின் நலனுக்காக இரங்கி வேண்டியதைக் கண்ட வருணன் இரங்கிப் பொன் மழை பெய்ய அருள் செய்தான். இனி அயலில் உள்ள பெண்ணை நதியைப் பாற்கடல் போல் பெருகி வரச் செய்ய விரும்பிய ஔவையார் புனிதவளமுள்ள பெண்ணை நதியை விளித்து என்ன சொன்னார்?

முத்துக்களைக் கொழித்துச் செழிப்புத் தருகின்ற பெண்ணை நதியே! நெடுங்காலமாக உன்னிடத்து வருகின்ற தண்ணீரை அகற்றி, நெய்யும் பாலும் குதித்து வரும்படி எடுத்துக்கொண்டு, கரைகளைத் தாக்கிக்கொண்டு செருமலை தெய்வீகனுடைய திருக்கோவலூர்க் கரைக்கு வரும்வரை அவற்றோடு ஓடிவருவாயாக.

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைபெய்து - குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.

இங்ஙனம் தெய்வீகத்தால் திருக்கோவலூரை வளப்படுத்திய ஔவையார் அதன் சிறப்பினைப் பெரிதும் வியந்து நின்றார். 'எக்காலத்திலும் நிறைந்த கீர்த்தியையே பெற்ற, பெருமையுடைய சேது நாட்டில் வளர்ந்தோங்கும் திருக்கோவலூரானது பொன் மழை பெய்கின்ற திருப்பதியாகும். அங்கே பருத்திச் செடி புடைவையாய்க் காய்க்கிறது. அந்த ஊரிலுள்ள வயல்கள் அரிசியை விளைவிக்கின்றன.

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர் - எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதுமா நாடதனில்
ஓங்குந் திருக் கோவலூர்.

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜேமனியில் கூட்டுறவு

10 அங்கத்தவருக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொடுத்து உதவ, நன்னடத்தையையும் நன்னிலையையும் வளர்த்தல்.

இவ்வாறாக ரைபீசன் 1888ஆம் ஆண்டு இறந்தபோது 463 கூட்டுறவுச் சங்கங்களைக் கண்டு மகிழ்ந்தார். அவர் இறந்தபோது ஜேமனியர் வாய்விட்டுக் கதறியழுதனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஜேமனியில் 14000 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

ரைபீசன் முறையில் அமைந்த இன்னோர் அம்சம் பங்காளர் சிறு தொகைகளையும் முதலீடுசெய்து சேமிக்கலாம் என்பதாகும். அவர்கள் உண்டியற் பெட்டிகளிற் சேமித்து முதலீடு செய்து வட்டிபெற வாய்ப்பிருந்தது; அங்கே கூட்டுறவு விருத்தியடைந்த வமைப்பில், கூட்டுறவு வங்கிகளும் வளர்ச்சியடைந்தன.

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பதில் எத்தனையோ கருத்துக்கள் மறைந்துள்ளன. தனிப்பட்டவராய் வாழும் மக்களுக்கு உண்டாகும் சிக்கல்களை நீக்குவதற்கு எழுந்த இயக்கங்கள் எல்லாவற்றிலும் கூட்டுறவு இயக்கமே தலை சிறந்தது. அது நல்லொழுக்கத்தையும் பொருளாதார மேம்பாட்டையும் உண்டாக்குவது.

### மேக்லகன் அறிக்கை

கூட்டுறவைப் பற்றி மேக்லகன் குழுவினர் செய்த பரிசீலனையின் அறிக்கை அதன் நன்மைகளைக் கூறுகிறது. 'தனிப்பட்ட சக்தியற்ற பலர் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு பொருள் நலன்களைப் பெறுவதல்லாமல் குணநலன்களையும், தம் சக்தியையும் அதிகரித்துக் கொள்ளவாய்ப்பு உண்டு" பலர் ஒன்று சேர்ந்த பலத்தினால் தன்நம்பிக்கை வலுப்படுகிறது. பலரின் கூட்டுறவால் ஒவ்வொருவருடைய குண நலன்களும் மேன்மைப்பட்டு எல்லோரும் வாழ்க்கை நலத்தை அடையச் சாதனம் ஒன்று கிடைக்கிறது. இதனால் சிறந்த தொழில் சிறந்த வாழ்க்கை நடத்த முடிகிறது.

### கூட்டுறவு ஏன்? அது என்ன?

கூட்டுறவு சுயாதீனமாய், தன் விருப்பமாயமைந்த சனநாயக சங்கமாகும். சுய உதவி, பரஸ்பர உதவி ஒரு

வர் எல்லோருக்கும் உதவி, எல்லோரும் ஒருவருக்கு உதவி என்பன வளரும் கூட்டுறவில் ஒற்றுமை, சமத்துவம், நேர்மை, உறுதி, உழைப்பு, முயற்சி, உதவி, பரோபகாரசிந்தனை, நல்லபொருள் என்பன இருக்கும்.

கூட்டுறவில் இலாபத்திலும் பார்க்க நலனே பிரதானம். இலாபத்தில் எல்லோருக்கும் பங்குண்டு. நலனில் எல்லோருக்கும் புகழுண்டு, பெருமையுமுண்டு. அங்கத்தவரின் நலனைப் பாதுகாப்பதற்கு நலன்புரிச் சங்கமோ, தொழிற்சங்கமோ கூட்டுறவுத் துறையில் தேவையில்லை. பணக்காரர் தம் பணத்தை முதலீடு செய்வதற்குக் கூட்டுறவியக்கத்தைவிட வேறு நிலையம் பெருமைதராது.

### கூட்டுறவு நன்மை தருமா?

கூட்டுறவால் உண்டாகும் நன்மைகள் மிகப்பல அங்கத்தவருக்குச் சனநாயக முறையில் தேர்ச்சியும் அனுபவமும் உண்டாகின்றன. சகோதரத்துவ மனப்பான்மை வளருகிறது. பரஸ்பர நன்நம்பிக்கை, தன்நம்பிக்கை, ஒத்துழைப்பு, தன்மதிப்பு என்பன மேலோங்குகின்றன வீண் செலவைக் குறைக்கவும் பொருளாதார முன்னேற்றத்தை அடையவும் வழிதருகிறது. எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம். ஆங்கிலப் பெரும் புலவரான றஸ்கின் அனைவரதும் மேம்பாடு எழுதி மகாத்மா காந்தியை உருவாக்கியவர். றஸ்கின் மேலும் சொன்னது கூட்டுறவு வாழ்க்கையின் நியதி என்று. கூட்டுறவு மனித சமுதாயத்தை அழியவிடாமற் பாதுகாக்கிறது.

முதலாளித்துவத்தில் தனிச் சொத்துரிமை, தனி முயற்சி, தனி இலாபம் இருப்பதால் அங்கே முதலும் தொழிலும் போட்டி போடுகின்றன. கூட்டுறவில் முதலும் தொழிலும் சொந்தம் கொண்டாடுகின்றன. முதலாளித்துவ முறையில் இலாபத்துக்காகப் பொருள்கள் செய்யப் படுகின்றன. ஆனால் கூட்டுறவு முறையில் உபயோகத்துக்காகவே பொருள்கள் உற்பத்தி செய்யப் பெறுகின்றன.

### கூட்டுறவினால் முன்னேறிய நாடுகள்

நாங்கள் ஐம்பது ஆண்டுகளாக வளர்ந்து வருகிறோம். எமக்கு வெள்ளைக்காரர் பத்தில் ஏழுபங்கு சுதந்திரத்தை 1931 ஆம் ஆண்டில் உதவினர். நாம் எங்கே நிற்கிறோம் என்று தெரியாமல் தவிக்கிறோம். கூட்டுறவால் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேமன், சுவீடின், டென்மார்க், நோர்வே, சுவிற்சலாந்து, அமெரிக்கா, சீனா, இந்தியா, வெகுவாக முன்னேறிவிட்டன.

### நாடுகள் கூட்டுறவால் முன்னேறக் காரணம் என்ன?

கூட்டுறவியக்கம் பரவிய நாடுகள் முன்னேறக் காரணம் என்ன? அந்நாட்டவர் சுறிச்சட்டிக்குள் கரணமடிப்பதில்லை. அங்கே சாதாரண மக்களுக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களை அவர் தம் வீட்டு வாசல்படியளவில் கொண்டுவந்து கொடுக்கக் கூடியதாகக் கூட்டுறவும் கல்வியும் வளர்ந்துள்ளன. கல்வியும் கூட்டுறவும் பெரிய சாதனங்கள். அங்கே கூட்டுறவு முறையில் சமூகப் பற்று, நாட்டுப்பற்று, தேசாபிமானம், சமரச மனப்பான்மை ஆகிய பண்பாடுகள் மேலோங்கி உள்ளன. கல்வி கற்கும் போதும், சமுதாய வாழ்வின் போதும், தேவையானவற்றை வாங்கும் போதும் கூட்டுறவு கைகொடுக்கிறது. உதவிசெய்கிறது. பல திறப்பட்ட மக்களை ஒரே நிறை என்ற சமநோக்கில் வாழ வழிவகுக்கிறது.

---

எது பிரதானமானது என்றால் நாம் என்ன எண்ணுகிறோம் என்பதல்ல—நாம் எதை அறிகிறோம் என்பதும் அல்ல—ஆனால் நாம எதைச் செய்கிறோம் என்பதே யாகும்.

— ரஸ்கின்

---

மூலிகை மர்மம்




## நிலாவாரை

நிலஆவிரை என்றும் நில வாகை என்றும் வழங்கும் இப்படர் கொடிச் செடி கபால உஷ்ணத்தைக் குறைக்கும் தன்மையுள்ளது. இது மூலம் வாய்வு வெப்பு, கிரந்தி, குன்மம், மலக்கட்டு முதலிய எல்லா நோய்களையும் நீக்கும் என்பர். மலக்கட்டை நீக்குவதால் இதற்கு வெண் மலம் போக்கி என்றும் பெயர் உண்டு. மலம் சலம் இரண்டையும் அடக்குதலும் அவை அடங்குதலும் ஆகா என்பது சித்த வைத்தியத்தின் முதற்பாடம் இவையிரண்டும் சிக்க அடங்காமற் கழிந்தால் திடஆரோக்கியம் உண்டாகும். இவையிரண்டையும் திண்ணமாகக் கழியச் செய்யும் இம்மூலி சிறந்த காயகற்பமாம்.

இது யூனானி வைத்தியத்திலும் புகழ் பெற்றது. அரபு நாடுகளில் செனாமக்கி, வக்காசென்னி என்னும் பெயர்கள் வழங்குவன என்பர்.

### உபயோகம்

இதன் இலைகள் உடனடியாகப் பிடுங்கிவந்து நெய்யில் வதக்கிச் சம்பல் செய்வதுண்டு. வறுத்த இலையுடன் சுண்டும், கிராம்பும் சேர்த்து இடித்து நீரிலிட்டு ஊறிய பின் வடிகட்டி உட்கொண்டால் மலபந்தம் யாவும் நீங்கும்.

---

## சேக்கிழார் சுவாமிகளைப்பற்றிய சாசனங்கள்

சேக்கிழார் சுவாமிகளைப் பற்றியும் இவர் செய்தருளிய செயற்கருஞ் செயலைப் பற்றியும் சாசனங்கள் கூறுகின்றன. அவை அவரைப் பற்றிக் கூறிய இடங்களில் சேக்கிழான் இராமதேவன், அருண் மொழித் தேவன், பல்லவராய, அருந்தவத்திருந்தவன், குன்றைமுனி, மாதேவடிகள் என்றெல்லாம் குறிப்பிடுகின்றன.

---

★ கூட்டுறவுப் பயிற்சி நாட்டின் ஒற்றுமை ★

## அங்கும் ← → இங்கும்

அமெரிக்க மாநிலங்களிலும், தென்னமெரிக்கப் பிரதேசங்களிலும் மேற்கிந்திய தீவுகளிலும், ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் தூர கிழக்கு நாடுகளிலும் அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலும் உள்ள பழைய திருக்கோயில் அமைப்பையும் சிவலிங்கத் திருவுருவங்களையும் கொண்டு ஹீரூஸ் பாதிரியார் தமிழின் பழைமையையும் சைவத்தின் பெருமையையும் போற்றியுள்ளார்.

* * *

மேற்கு நாடுகளின் தற்காலத்து விஞ்ஞானிகள், பொறியியலாளர் அறிவாளிகள் முதலானோர் தமிழர் அக்காலத்தில் கருவி வாய்ப்பில்லாமலே கட்டியெழுப்பிய கோவில்களையும் கோபுரங்களையும் கண்டு அவர் தம் அறிவுத் திறத்தையும் ஆற்றலையும் வெகுவாக வியந்து போற்றுகிறார்கள்.

* * *

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பழைய ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்து அச்சிடுவதற்கு வெகுவாக ஊக்கமும் உபகரிப்பும் இராமநாதபுரத்து மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் மந்திரியாரும் தம்பியாருமாய பொன்னுச்சாமி தேவராவர். பாஸ்கரசேதுபதி அவர்களே சுவாமி விவேகானந்தரை அமேரிக்காவுக்குச் சென்று இந்து மதத்தின் பெருமையைப் பேசவைத்தவராவர்.

---

## வழக்கிலுள்ள வட மொழிகள் சில

தத்துவம் — பொருளியல் உண்மை
தத்துவாத்வா — பொருள்வழி
தநபதி — செல்வன்
தனம் — செல்வம்
தநயன் — மகன்
தநு — உடல்
தனுசு — வில்
தந்தம் — பல்
தந்திரம் — சூழ்ச்சி
தபசி — தவஞ் செய்பவர்
தபனன் — கதிரவன்
தபநீயம் — பொன்
தமசு — இருள்
தமருகம் — உடுக்கை
தம்பதி — கணவனும் மனைவியும்
தம்பம் — தூண்
தயவு — இரக்கம்
தயிரியம் — உறுதி
தயிலம் — எண்ணெய்
தரணி — நிலம்
தராசு — நிறைகோல்
தரிசனம் — பார்வை
தரித்தல் — அணிதல்

## கூட்டுறவின் நன்மைகள்

தான் என்னும் அகங்காரமும் தனது என்னும் மமகாரமும் தற்பெருமைக்குக் காரணம். தற்பெருமை கொண்டவர் பிறரை மதியார். ஆனால் செருக்குக்குணம் இல்லாமல் தன்னைத் தாழ்த்திக் கொண்டவரிடம் தன்மதிப்பு உண்டாகும். தன்மதிப்புள்ளவர் தன்னை மதிக்குமாப்போல் மற்றெல்லோரையும் மதிப்பர். மற்றெல்லோரும் தன் மதிப்புள்ளவரைத் தலைதாழ்த்தி மதிப்பர். உயர்வதற்குத் தாழ்தல் வேண்டும் என்பது சைவம்.

தன்மதிப்பு எண்ணம் உதிக்கும்போது கூட்டுறவு கருக் கொண்டு விடுகிறது. பிறரைத் தாழ்த்தி வீழ்த்தி சுரண்டி முன்னேறவேண்டும் என்னும் மிருகத்தனமான நிலையை விடுத்து, ஒருவன் பிறரோடு ஒத்துழைத்து அவர்களின் மேம்பாட்டால் தானும் மேம்பாடு அடையலாம் என்னும் நிலை கைகூடும்போது, கூட்டுறவு பூரண பொலிவைப் பெறுகிறது.

ஒருவன் தனிப்பட்ட முறையில் செய்து நிறைவேற்ற முடியாத காரியத்தைக் கூட்டுறவு முறையால் செம்மையாகவும், எளிதாகவும் செய்து நிறைவேற்றலாம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும் வாக்கியமும் இங்கே அமைவுடையதாகிறது.

கெடுபிடிகளாலும் சீர்கேடுகளாலும் சுயநலமிகளாலும் சமூகங்கள் தேய்ந்து போகும்போது கூட்டுறவு முறை அவற்றைத் தூக்கிச் சீராக்கி வாழவைக்கிறது. சமூகம் நல்லவழியில் திருந்தி முன்னேறுவதற்கு வழிகாட்டும் இயக்கம் கூட்டுறவு என்பர். கூட்டுறவால் பொருளாதார வளம் மாத்திரமன்றி, நாகரிகம் பண்பாடு அரசியல் ஆகிய துறைகளும் அபிவிருத்தியடைகின்றன.

கூட்டுறவியக்கம் முன்னேறும்போது சமூகத்தில் நேர்மை, நியாயம், நீதி, ஒற்றுமை, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நாகரிகம், சால்பு ஆகிய மனிதப் பண்பாடுகள் அபிவிருத்தியடைகின்றன.

இங்ஙனம் பண்பாடுகள் அபிவிருத்தியடைவதோடு தனிமனிதனும் தன் தன் தராதரம் உயர அவனும் மேலோங்குகிறான், அவன் அறவட்டி கொடுத்தல், கடன் பளுவால் மெலிதல், பணக்காரருக்கு அஞ்சுதல் ஆகிய நிலைமைகளினின்றும் நீங்கி, அற்பவட்டிக்குப் பணம் பெறுதல், கடனை ஆவகாசமாகத் தீர்த்தல், மிச்சம்பிடிக்கப் பழகுதல், பரஸ்பர நம்பிக்கையுள்ளவனாதல், வங்கிகளில் பணம் போட்டு வைக்கப் பழகுதல், நல்ல மனநிலை பெறுதல், ஆகிய நல்லியல்புகள் சூழச் சுகதேகியாய்ச் சுற்றுடன் மெச்ச வாழத் தலைப்படுகிறான்.

கூட்டுறவியக்கத்தால் உழவுத் தொழிலாளர் பல நன்மைகள் பெறுகின்றார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான விதைநெல், உழவுக் கருவிகள், யந்திரங்கள் பசளைகள் முதலியவற்றை இலகுவிற் பெறுவதோடு, தாம் விளைவிக்கும் தானியங்களையும் உற்பத்திப் பொருள்களையும் நல்ல விலைக்கு விற்கக் கூட்டுறவு இயக்கம் உதவி செய்கிறது. கூட்டுறவு முறையில் ஒன்றுபட்ட கமக்காரர் அரசாங்கத்திடமிருந்து பெரு நிலப்பரப்பையும் பெற்றுக் கமஞ்செய்ய வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

கூட்டுறவியக்கத்தால் பொதுமக்கள் பலவகையாலும் நன்மைகள் பெற்றுள்ளார்கள். நாளாந்தத் தேவைக்குரிய பொருள்களை மலிவாகவும், நல்ல பொருள்களாகவும் வாங்கலாம். கூட்டுறவு வங்கிமூலம் வீடு வளவுகள் வாங்கவும், கூட்டுறவு வைத்தியசாலை மூலம் நோய் நீக்கவும், இன்னும் பல தேவைகளையும் வசதிகளையும் பெறவும் வாய்ப்புக்கிடைத்துள்ளது.

கூட்டுறவியக்கம் பொதுமக்களுக்கு ஏகபோக விற்பனையாளரிடமிருந்தும், கொள்ளைலாபம் பெறுவோரிடமிருந்தும் பாதுகாப்பளிக்கிறது. கடனுதவுஞ் சங்கங்கள் ஏழைக் கமக்காரர் விளைவித்த முழுவதையும் முதலாளிகளிடம் கொடுத்துவிட்டுப் பட்டினிகிடக்கும் நிலையிலிருந்து பாதுகாப்பளிக்கின்றன.

கீழ்ப்படியிலிருந்து மேற்படிக்கு ஏறச்செய்யும் ஏணி போலக் கூட்டுறவு இயக்கம் பொருளாதாரத் துறையில் ஏழைமக்களை மேல்நிலைக்கு எடுத்துச் செல்லுஞ் சக்தி வாய்ந்ததாயுள்ளது.

இன்னும் பொதுமக்களைத் தன்னலம் சுயநலம் ஆகிய உபயோகமற்ற நிலையிலிருந்து பரஸ்பர உதவி, சமூக வாழ்வு, தேசாபிமானியாகும் தகுதி ஆகிய நன்மை நிறைந்த மேல்நிலைக்குக் கொண்டு செல்லுகிறது. அதனால் மக்களுக்காக வாழ்தல் என்னும் நிலை வாய்க்கவே, அவர்கள் மிக மேலான சனநாயக தத்துவத்தை உணர்ந்து நடப்பவர்களாய், உத்தம குடிகளாக வாழக் கூட்டுறவியக்கம் வழி வகுக்கிறது.

## தொகையகராதி — நான்கு

**உபாயம்**

சாமம், பேதம், தானம், தண்டம்.

**உயிர்த் தோற்றம்**

கருப்பை, முட்டை, நிலம், வியர்வை.

சராயுசம், அண்டசம், சற்பிசம், சுவேதசம்.

**உரைவகை**

கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை.

**உவகை**

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு.

**ஊறுபாடு**

எறிதல், குத்தல், வெட்டல், மோதல்.

**ஓசை**

எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல்.

**கணக்கு**

கூட்டல், பெருக்கல், கழித்தல், வகுத்தல்.

கருங்கல் இல்லாத தஞ்சாவூரிலே 216 அடியுயரத்தில் கல்விமானம் அமைத்தும் 80 தொன் நிறையுள்ள ஒரே கருங்கல்லை மேலே உயர்த்தியும் திருப்பணி புரிந்த இராஜராஜ சோழனின் பொறியியலறிவும் கலையறிவும் வரலாற்றுப் பிரசித்தமானவை.

## உங்களுக்குத் தெரியுமா? — விடைகள்.

1. மக்கியாவலி. 2. அறுபதுமைல் 3. ஒரு காற்று 4. புஸ்மன். 5. யோண்கேபோட். 6. பொலிவியா. 7. இருபத்திரண்டுயார். 8. மில்லியன். 9. இருநூற்றுறு 10. அறுபத்துநான்கு. 11. டிறைடன். 12. கலிலியோ. 13. பக்கிரநங்கல், 14. றதர் போட் பிரபு. 15, வெனிசூலா, 16, உத்தரப் பிரதேசம். 17. பான்கேஸ்ற். 18, நிம்புஸ், 19, கியூபா, 20, அமிலாஏகார்

## மில்க்வைற் செய்திச் சுருக்கம்

**வித்தியாரம்பம்**

எதிர்வரும் விஜயதசமி நாளில் குழந்தைகளுக்கு வித்தியாரம்பஞ் செய்யவிருக்கும் பாடசாலைகள், சனசமூகநிலையங்கள் தங்களுக்குத் தேவையான ஏடுகளுக்கு முன்கூட்டியே விண்ணப்பியுங்கள். ஏடு தயாரிப்பதற்கு ஓலைச் சார்வுகள் கிடைப்பது அருமையாவதால் சென்ற ஆண்டு எமக்குப் பெருந்தட்டுப்பாடு உண்டானது.

* * *

குமரன் மில்ஸ் சொந்தக்காரரும் நாவற்குழி வாசியுமான சுப்பிரமணியம் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்) எமக்கு ஓலைச்சார்வுகள் தந்து உதவியமைக்கு நன்றி.

* * *

வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் எமக்கு ஓலைச்சார்வுகள் தந்துதவினால் வித்தியாதானத்துக்கு உபகரித்த புண்ணியம் அவர்களுக்கும் உண்டு.

* * *

மில்க்வைற் செய்தியைத் தவறாமல் பெறவிரும்பும் பாடசாலைகளும் சனசமூக நிலையங்களும் எமக்குத் தபாற் கூலியைத் தவிர்ப்பதற்கு ஏதாவது வசதியைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

* * *

தனிப்பட்ட வாசகர்கள் மில்க்வைற் செய்தி தவறாமல் பெறுவதற்குச் சுலபமான வழி உரியமுறையில் சவர்க்கார மேலுறைகளை அனுப்பினால் போதும். நாங்களே தபாற் செலவைப் பொறுத்துச் செய்தியை அனுப்பிவைப்போம்.

* * *

மில்க்வைற் குளந்தோண்டும் பணி இந்த ஆண்டு நன்றாக நடைபெறவில்லை. பொதுப்பணி, சிரமதானப்பணி செய்வோருக்கு நாங்கள் உதவும் மண்வெட்டிகள், இரும்புத் தாச்சிகள் இம்முறை அதிகம் பயன்பெறவில்லை. மழை பெய்வதன்முன் குளங்களைப் பதித்து நீரைத் தேக்குவதற்கு நாங்கள் உதவிசெய்வோம்.

* * *

வேப்பம் விதைகளைப் பொறுக்கி எமக்கு அனுப்பி நல்ல விலை பெற்றுக்கொள்ளுங்கள். இம்முறை மரம்நாட்டும் பணியில் வேம்பு, மலைவேம்பு, இலுப்பை, சஞ்சீவி, ஆகிய கன்றுகளுக்கு முன்கூட்டியே விண்ணப்பியுங்கள்.

* * *

இப்பில் இப்பில் மரம் பலவிதமாகப் பயன்தருகிறது. ஆடுமாடுகளுக்குப் புரதசத்து நிறைந்த உணவு தருகிறது. விறகு தருகிறது. காற்றைத் தடுப்பதோடு மண்ணரிப்பையும் தடுக்கிறது. எம்மிடம் இப்பில் இப்பில் ஏராளமாக உண்டு.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

கூட்டுறவியக்கத்தால் தனிப்பட்டவரும், சமூகமும், நாடும் முன்னேற வழிபிறந்தது. உணவுக்கஷ்டம் உண்டான வேளையில் மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றியது கூட்டுறவுஇயக்கமேயாகும். உற்பத்தியாளர் கூட்டுறவும், நுகர்வோர் கூட்டுறவும் நெருங்கிய தொடர்பும் உறவுங் கொண்டால் இடையிலுள்ள தரகர், சுரண்டல்காரர், பதுக்கல் பேர்வழிகள் தாமாகவே பின்னடைந்து விடுவார்கள். விவசாயம் மீன்பிடி ஆகிய துறைகளில் கூட்டுறவு அபிவிருத்தியடைதல் வேண்டும்.

ஃ ஃ ஃ

சிலர் கூட்டுறவுத் துறையில் அரசாங்கம் தலையிடுதலாகாது என்று கருதுவர். அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தை இத்துறையில் முதலீடு செய்தபின் தலையிடாமலிருப்பது சாத்தியமாகாது, நல்லவர்கள் யோக்கியர்கள் கூட்டுறவுத்துறையில் தலையிட்டு மேற்பார்வை செய்தால் கூட்டுறவுத் துறைக்குச் சட்டங்கள் உப விதிகள் தேவையில்லை.

ஃ ஃ ஃ

இங்கிலாந்து, சுவீடின் முதலிய நாடுகள் போல இலங்கையும் கூட்டுறவுத்துறையில் மேற்பார்வையாளர் இல்லாமல் இயங்கலாம். ஆனால் நம்பிக்கையும் நேர்மையும் வாய்த்த சமூகத்தொண்டர்கள் இதற்குக் கை கொடுத்தல் வேண்டும்; ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு என்று உதவும் நாள் ஒரு நாள் உதயமாகும்.

ஃ ஃ ஃ

ஒரு காலத்தில் வடமாகாணத்தில் கூட்டுறவுத்துறையில் 80 நிலையங்கள் மிகவும் நன்றாகவும், 311 நிலையங்கள் நன்றாகவும், 93 நிலையங்கள் நட்டத்திலும் நடைபெற்றதுண்டு. அதே காலத்தில் மேல்மாகாணத்தில் 12 நிலையங்கள் மிக நன்றாகவும், 308 நிலையங்கள் நன்றாகவும் 108 நிலையங்கள் மோசமாயும் நடைபெற்றன. எல்லோரும் நல்லவராயிருந்தால் நட்டம் உண்டாகியிருக்க மாட்டாது.

ஃ ஃ ஃ

கூட்டுறவுத்துறையில் உணவுற்பத்தி, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் என்பன உலகப்புகழீட்டும் வகையில் இலங்கை அபிவிருத்தியடைந்தமையை மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

## பழங்கணக்கு

சங்கக்கடைகள் எனவழங்கும் கூட்டுறவு நிலையங்கள் இலங்கையில் 1921 — 1960 எனவுள்ள நான்கு தசாப்த காலத்தில் எவ்வாறு வளர்ச்சியுற்றன என்பதைப் பழைய கணிப்பு ஒன்று பின்வருமாறு காட்டுகிறது;

| ஆண்டு | நிலையங்கள் | அங்கத்தவர் | ஆதாயம் |
|---|---|---|---|
| 1921 | 154 | 18000 | 132060 |
| 1931 | 600 | 24000 | 1243000 |
| 1941 | 1852 | 79000 | 4458000 |
| 1952 | 8239 | 1267000 | 186087000 |
| 1960 | 13962 | 1536000 | 526483000 |

பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தில் பிலிப் குணவர்த்தனா கொண்டுவந்த கூட்டுறவு அபிவிருத்தி வங்கி மசோதா உருப்படியாக நிறைவேற்றப்பட்டிருந்தால், இலங்கையில் கூட்டுறவுத்துறை திசை திரும்பி நன்கு நடைபெற்றிருக்கும் என்று கருதுவாரும் உளர். அந்த மசோதா பல திருத்தப் பிரேரணைகளுக்கிலக்காகி, மக்கள் வங்கி மசோதாவாகி உருப்பெற்றபோது, குணவர்த்தனா பெருந்தன்மையோடு பண்டாரநாயகவுக்கு வழிவிட்டு 18-5-59 இல் விலகிக்கொண்டார்.

ஃ ஃ ஃ

ஒரு காலகட்டத்தில் இலங்கையில் 14,554 கூட்டுறவுக் கடைகளும், 112 பலநோக்குக் கூட்டுறவு நிலையங்களும், 119 மொத்த நிலையங்களும் நிலவின. கூட்டுறவு மூலம் 16,33,699 அங்கத்தவர் தங்கள் இல்லங்களுக்குத் தேவையானவற்றைக் கொள்முதல் செய்தார்கள். கூட்டுறவுத் துறையில் 237473700 ரூபா மூலதனமாயிருந்தது.

ஃ ஃ ஃ

கூட்டுறவியக்கம் உலகப் புகழ்பெற்றுள்ள பரந்த இயக்கம். அது சென்ற 70 ஆண்டுகளாக இயங்கிவருகிறது. இதுவரை 77விதமான சங்கங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. மிகப்பெரிய கூட்டுறவியக்கங்கள் உலகில் 1500005 என்பர். இந்தியாவிலேயே 250000 இயக்கங்கள் 40 விதமான துறைகளில் இயங்கிவருகின்றன.

ஃ ஃ ஃ

கூட்டுறவுத் துறையில் எங்கள் ஈழவளநாடு பெரும் புகழீட்டியுள்ளது. அதிலும் எங்கள் யாழ்ப்பாணப்பகுதி உலகப் புகழ்பெற்றிருந்தது. சென்ற தலைமுறைக் காலத்தில் பெரியவர்கள் சிலர் இத்துறையில் முழுமூச்சாயீடுபட்டுப் பெரும் புகழும் ஆதாயமும் ஈட்டினர். வெளிநாட்டவர் பலர் யாழ்ப்பாணத்தாரின் கூட்டுறவுப் பெரு வெற்றியை நேரிலறிந்து பாராட்டியுள்ளார்கள். தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து பலர் பலமுறை இங்கே வந்துபார்த்து நேரிலனுபவம் பெற்றுப்போனார்கள்.

ஃ ஃ ஃ

இலங்கையில் கூட்டுறவுத்துறையபிவிருத்தி விசேடத்தால் வங்கிகள், ஆலைகள், எண்ணெய் வடிசாலைகள், நெற்குத்தும் ஆலைகள், மொத்த விற்பனவு நிலையங்கள், வைத்தியசாலைகள், விவசாயத்துறையில் விற்பனை நிலையங்கள், மின்வள்ளப் போக்குவரத்துத்துறை, பஸ் போக்குவரத்துத்துறை, தோட்டத்துறை, கைத்தொழில் துறை, பாற்பண்ணைகள், அச்சகங்கள், நூலாசிரியர் சங்கங்கள், பதிப்பகங்கள், இளைஞர் மன்றங்கள், சகாயநிதிச் சங்கங்கள், நலன்புரி சங்கங்கள் என்பனவும் இன்னும் பலவும் வளர்ச்சியடைந்துள்ளன;

ஃ ஃ ஃ

கூட்டுறவு முறையில் கைத்தொழிலபிவிருத்தியின் பொருட்டு இலங்கையரசாங்கம் 1951 — 1963 வரை 11605699 ரூபா வழங்கியிருந்தது.


★ கூடி வாழ்தலில் கோடி நன்மை ★

பிலிப் குணவர்த்தன மூவாண்டுகளே பண்டாரநாயகாவின் கூட்டாட்சியில் விவசாயத்துக்கும் கூட்டுறவுக்கும் பொறுப்பாகவிருந்தார். அவர் காலத்தில் C. W. E. என்ற கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் காட்டிய ஆதாயம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1956 | — | 131000 ரூபா |
| 1957 | — | 850000 ,, |
| 1958 | — | 1200000 ,, |

பிரதம மந்திரியாருக்கு அந்தக்காலத்திலிருந்த நெருக்கு வாரம் காரணமாக அவர் பிலிப்பிடமிருந்து கூட்டுறவுத் துறையைக் கழற்ற முயன்றபோது பிலிப் தாமாகவே விலகிக்கொண்டார்.

இற்றைக்கு இருபதாண்டுகளுக்கு முன் 1960 ஆம் ஆண்டில் நாட்டில் 4741 பலநோக்குக் கூட்டுறவு நிலையங்களும், 14000 கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன. அவற்றின் பரிமாற்றக் கைமுதல் 221 கோடி ரூபாவுக்கும் அதிகமாயிருந்தது. பலநோக்குகளில் ஒன்றுபடுத்துதல், பங்கீடுசெய்தல், உற்பத்திசெய்தல், சந்தைப்படுத்துதல் முதலியன நடைபெற்றன.



## For Children:

— Swami Sivananda

## SITA

Sita was the wife of Rama. She was the daughter of Janaka. She was pure, simple and devoted to Rama. She was an ideal wife. May all girls shine like Sita.

### Be Honest

Even in small affairs be honest. Honesty is the best policy. Honesty is a virtue. An honest man is trusted by all. He attain success in life. He will become famous.

God will bless an honest man. Officers like an honest man. If you are honest you will have good sleep and good health.

Do not take bribes. It is a great sin. Live within your means. Cut the coat according to the cloth. Make both ends meet. Lead a simple life.

## பனையபிவிருத்தி

நாடெங்கும் பனையபிவிருத்தி செய்வதற்கு எமக்குக் கிடைக்கும் அழைப்புக்கு நன்றி. நாட்டில் பலபாகங்களிலும் பன்னவேலையின் பொருட்டு ஓலைவாரும் இரும்பு யந்திரத்தை இலவசமாக வழங்கியதோடு அதன் உபயோகத்தையும் பழக்கிவருகிறோம். பன்னவேலை பழகிய நிபுணர் ஒருவர் உங்கள் சங்கங்களுக்கு வந்து வேலை பழக்குவதற்கும் இருக்கிறார். தேவையானோர் விண்ணப்பியுங்கள்.

இவ்வருடம் அயல் மாவட்டங்களிலும் பனையபிவிருத்திக்காகப் பனம்விதைகள் சேர்க்கவுள்ளோம். வழக்கம் போலத் தந்த கைகளைத் தருமாறு மேலும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். ஆயிரமாயிரமாக முன்னர் பல்லாண்டுகள் அள்ளித் தந்தவர்களுக்கு மீண்டும் மீண்டும் இராசபயிரின் பேரால் நன்றி கூறுகிறோம். பனை உங்கள் பயிர். நாங்கள் வெறும் அபிமானிகள். தொண்டு உங்களுடையது. பயன் ஊருக்கே உரியது எமக்கல்ல. பனையை வளர்ப்போம்; பயனைப் பெறுவோம். இந்தச் சுலோகம் எங்கும் பரவுக. எல்லோரும் பனைவளம் பெருக்க வாரீர்.

## சென்ற நூற்றண்டில் அடிமை குடிமை நீக்கம்

பழம்பெருமை கூறுவோர் பலர் தமது முன்னோர் பெரிய முதலிகள் வம்சத்தவர் என்றும் அடிமை குடிமை ஆதிக்கம் எல்லாம் பரம்பரையாகப் பொருந்தி வாழ்ந்த முதன்மையோர் என்றும் பல்லவி பாடுதல் வழக்கம். இத்தகைய அடிமை முறைகள் யாவும் 29-12-1844 இல் சட்டபூர்வமாக நீக்கப்பட்டது. இம்முயற்சியில் பெரிதும் ஈடுபட்டவர் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலியாராவர், இவர் சேர் முத்துக்குமாரசுவாமியின் தந்தையாராவர், அன்றி சேர் இராமநாதனின் தாயாரின் தந்தையாருமாவர். இந்த முயற்சியால் 2800 அடிமைகள் விடுதலையாயினர்,

முற்காலத்தில் ஆண் அடிமை 17 ரூபாவாகவும் பெண் அடிமை 34 ரூபாவாகவும் விற்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் 22000 அடிமைகள் இருந்தனர், இவர்கள் பஞ்சம் வந்த காலத்தில் விலைபோனவர் என்பது வரலாறு, இராமநாதன் குடும்பம் தலைமுறை தலைமுறையாக நாட்டுக்கு நன்மை செய்தது,

MWS MILKWHITE மில்க்வைற் செய்தி
மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவன வற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.
நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப் பவுடர் மேலுறை 2.
மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

## மணியோசை !

பெரிய ஆலயங்களிலுள்ள அசையாமணி அந்தக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியானவை. இன்று எங்கள் ஊரிலேயே 1000 றுாத்தல் நிறையுள்ள அசையாமணிகளை அருமையான நாதம் ஒலிக்கும் வகையில் உருவாக்கவல்ல ஆசாரியார்கள் கலைத்திறன் கைவரப் பெற்றவர்களாகவிருக்கிறார்கள்.

அன்று புதுக்குடியிருப்பு முருகன் ஆலயத்தில் மூல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிரதிநிதிகளும் பிரமுகர்களும் கூடிய வேளையில் மில்க்வைற் தொழிலதிபர் சங்கற்பஞ்செய்து உருக்குவேலையை ஆரம்பித்தபோது 1000 றுாத்தல் மணியொன்று நல்லூர் சின்னராசா அவர்களால் உருவாக்கப் பெற்றது. புதுக்குடியிருப்புவாசிகள் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம்செய்த சிறப்பும் மணியுருவாக்கிய பக்தியும் முன்மாதிரியானவை.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் நாளொரு வண்ணம் வளர்ந்து வருகிறது. அழகியதேர் உருவான பின், அருமையான கோபுரம் உருப்பெற்று நிறைவுறுகிறது. அமைதியான திருமுறை மண்டபத்தை அடுத்துப் புதிதாக எழுந்துள்ள ஞானசுரபி என்னும் அன்னதான மடம் அமுதசுரபியாயும் அடியார்கள் தங்கும் ஆறுதல் மடமாயும் அமையும். இம்மண்டபத்தை உருவாக்குவதற்குப் பெருநிதியனுப்பியவர் மலேசியாவில் வாழும் உரும்பராயைச் சேர்ந்த சின்னையா என்பவராகும். கல்விக் கந்தோரில் பெரும்பணிபுரிந்த சின்னையா அவர்களை முன்னர் நாம் குபேரசம்பத்தும் குசேலசம்பத்தும் உடையவர் எனக் குறிப்பிட்டுள்ளோம். கோயிற்றொண்டு, ஏழைச் சிறுர்கள் தொண்டு, கல்வித்தொண்டு புரிவதில் கங்கணம் கட்டிநிற்கும் முதியவர் இன்னும் பல தொண்டுகள் செய்து நிறைவுறும்வரை வாழ்வாராக. அவர் தொண்டுகள் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் இல்லை.

துர்க்கை அம்மன் கோயிலில் 11-8-80 திங்கள் முற்பகல் நிகழவிருக்கும் பெரிய வைபவம் இணுவில் மல்ரி ஓயில் ஸ்தாபனத்தாரின் அன்பளிப்பான அசையாமணி ஏற்றுவிழாவாகும். இம்மணியை யாழ்ப்பாணம் சின்னராசா அவர்கள் உருவாக்கியுள்ளார்.

## பொருளாதாரம்

ஒரு தேசத்தினுடைய பொருளாதார முன்னேற்றம் ஒவ்வொரு தனிமனிதனுடைய முன்னேற்றத்தைப் பொறுத்தே இருக்கின்றது. தனிமனிதனுடைய பொருளாதார முன்னேற்றம் சில சமயங்களில் வரவை அனுசரித்து செலவு செய்யாததாலேயே சிர்கெட்டுப்போகிறது. சில சமயங்களில் வரவை ஒருவர் சம்பாதித்து 10 பேரைக் காப்பாற்றவேண்டி இருப்பதாலும் சிரமங்கள் ஏற்படும். அதுபோன்ற சூழ்நிலையில் 10 பேர் ஒருவருக்கு சுமையாக இருக்காமல் அவரவர் சக்திக்கு உட்பட்டு சிறு சிறு தொழில்கள் செய்யவேண்டும். வீட்டில் இருந்துகொண்டே செய்யும் தொழில்கள் ராட்டையால் நூல் நூற்றல், தையல் வேலை, துணி பொம்மைகள் தயார்செய்தல், பிளாஸ்டிக் கயிறு, பாசிகளால் கைப்பைகள், கூடைகள் முதலியன செய்தல், சிறு புத்தகங்கள் பைண்டு செய்தல் எம்ராய்டறி போடுதல், குழந்தைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்தல், படிப்புச் சொல்லிக் கொடுப்பது தவிர அருகில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கோ, வியாபார ஸ்தலங்களுக்கோ சிறு வேலைகள் காகிதப்பை ஒட்டுதல், பைகள் தைத்துக் கொடுத்தல், அட்டைப்பெட்டிகள் ஒட்டிக்கொடுத்தல் போல் ஏதாவது வேலைகளைச் செய்து பயனடைய வேண்டும்.

—இராஜாஜி




## அண்ணா கமத்தை அமைச்சர் பாராட்டினார்

அண்மையில் வடபகுதிக்கு வருகைதந்த மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் தமது பணிகளில் ஒன்றாக இணுவிலில் உள்ள அண்ணா கமத்தையும் பார்வையிட்டார். அண்ணா கோப்பி எனப் பொதுவாக வழங்கும் நிறுவனம் உற்பத்தித் துறையில் துரித முன்னேற்றமடைந்து, தொழிலகம் நிறுவிப் பலபேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துள்ளதோடு, பெரு நிலப்பரப்பில் வாழை, திராட்சை உண்டாக்கி வெற்றியீட்டி அந்நிலப் பரப்பில் மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணையும் நடத்துகிறது. மாட்டுப்பண்ணை ஒன்றை வசதி வாய்ப்பில்லாத வரண்ட பிரதேசத்தில் நடத்தும் எஸ். பி. நடராசா அவர்களை ஊக்கப்படுத்திய அமைச்சர் சில உறுதி மொழிகளும் கூறியுள்ளார். அவை என்னவாகும் என்பதை இருந்து பார்ப்போம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம், யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப் புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் 1-8-1980